திவ்வியானந்தம் - 8.

# தர்மம்



ஸ்ரீ சுவாமி சிவானந்தர்
ரிஷிகேசம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்தரின்
ஐந்தாம் வருடாந்தப் புண்ணிய திதி
(ஆஷாட பகுன நவமி 18-7-68)
வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்வியானந்தம் — 8

# தர்மம்

இயற்றியவர்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்தர்

( ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கப்பட்டது )

பிரசுரிப்பு :

ஆத்மஜோதி நிலையம்

நாவலப்பிட்டி

விலை ] 1968 [ சதம் 20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Published by*
*Atmajothi Nilayam, Nawalapitiya.*

*All Rights Reserved for*
*The Divine Life Trust Society,*
*Rishikesh.*

முதற் பதிப்பு — 1000 பிரதிகள்

அச்சுப்பதிவு :

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மம்

மற்றையவர்களைக் குறித்து ஆதரவாகச் சிந்தித்து, அவர்களுக்கு நன்மை செய்யும் மனப்பான்மையே தர்மம். பொது அன்பே, சர்வான்ம அன்பே தர்மம். அது தரித்திரருக்குத் தாராளமாகக் கொடுத்தல். அது பிறர்நலப் பற்று. வறிஞருக்கு உதவியளிப்பதற்குக் கொடுப்பது எதுவோ அது தர்மம்.

பொதுக் கருத்தில், அன்பு, தண்ணளி, நல்லெண்ணம் என்று தர்மம் பொருள்படுகிறது. இறையியற் கருத்தில் அது மனிதர்பால் நல்லெண்ணமும் கடவுள்பால் பரம பக்தியும்.

பிரதிபலன் அல்லது கைம்மாற்றுச் சிந்தனையின்றி மற்றையவர்களுக்கு உபயோகமாயிருக்கும் ஆசையே உண்மைத் தர்மம். செயலில் அன்பே தர்மம்.

தர்மம் வீட்டிற் றொடங்கிறது; ஆனல் அது அப்பாலும் செல்லவேண்டும். முழுவுலகும் உனது வீடே. நீ முழுவுலகின் ஒரு பிரசை. முழுவுலகின் நலத்திற்காக வண்மை எண்ணம் விருத்திபண்ணுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் திரட்டிப் பதுக்கி வைப்பது பாவம். எல்லாச் செல்வமும் இறைவனுக்கே உரியது. எவன் தனது சொத்தின் தர்மாதிகாரியாகச் சீவித்து, தனது பணத்தைத் தர்மத்திற் செலவழிக்கிருனே, அவனே உண்மையில் இறைவனுக்கே சொத்து உரியது என்றெண்ணி மகிழ்ச்சியாக வாழ்கிருன். அவன் மோட்சம் அல்லது நித்திய அமைதி அடைகிருன்.

தாகமுள்ளோர் கங்கா நீரை அருந்திஞல் கங்கையின் நீர் குறையமாட்டாது. அவ்வாறே நீ தர்மஞ் செய்தால் உன் செல்வம் குறையமாட்டாது.

உனது வருமானத்தில் பத்தில் ஒன்றை அல்லது ரூபாவுக்கு ஆறு சதவீதம் தர்மத்துக்குக் கொடுக்குக. மகிழ்ச்சியாகவும் விரைவாகவும் தயக்கமின்றியுங் கொடுக்குக. மரணம் வரையில் தர்மங்களைத் தள்ளிவையாதே. தினமும் தர்மஞ் செய்குக.

பிரார்த்தனை உன்னைக் கடவுள்பால் நடுப்பாதித் தொலைவுக்குக் கொண்டு செல்கிறது. உபவாசம் அவரது பரம இருப்பிட வாயிலுக்குக் கொண்டு செல்கிறது. தர்மம் உனக்கு உள்ளேபோக அனுமதி பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தர்மம் எது?**

ஒவ்வொரு நற்செயலும் தர்மமே. தாகமுள்ளோருக்குத் தண்ணீர் கொடுப்பது தர்மம். துன்புற்ற மனிதனுக்கு ஆறுதலளிக்குஞ் சொல் தர்மம். நோயுற்ற ஏழை மனிதனுக்குக் கொஞ்சம் மருந்து கொடுப்பது தர்மம். ஒரு முள்ளை அல்லது கண்ணுடித் துண்டை வீதியிலிருந்து அகற்றுவது தர்மம்.

கருணையும் அன்புமுடையதாயிருத்தல் தர்மம். உனக்குச் செய்யப்பட்ட ஏதோ ஒரு தீங்கை மறப்பதும் மன்னிப்பதும் தர்மம். துன்பப்படும் ஒரு மனிதனுக்குச் சொன்ன அன்புச் சொல் தர்மம்.

டாலர் (dollar) அல்லது ரூபாய் (rupee) அல்லது ஷில்லிங்கு (shilling) என்னும் கட்டளைகளிற் கொடுப்பதில் தர்மம் கட்டுப்படுத்தப்படவில்லை. துன்புறும் மக்கள்பால் நன்ருய்ச் சிந்திக்குக. அவர்களின் சேமத்திற்காகப் பிரார்த்திக்குக. இது அதிக பணத்திலும் கூடுதலாக நன்மையை நிறைவேற்றும்.

**தர்ம வகைகள்**

வித்யா தானமே, ஞானம் அறிவுறுத்தலே சிறந்த தர்மம். ஓர் ஏழை மனிதனுக்கு நீ உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தால் அவன் பசிகொள்ளும்போது அவனுக்கு மறுபடியும் உணவு தேவைப்படுகிறது. உண்மை அவ்வாறிருக்க, ஞானம் உடம்பெடுக்கும் காரண மாகிய அஞ்ஞானத்தை நீக்கி எல்லாவிதத் துன் பத்தையும் என்றும் அழிக்கிறது.

நோயுற்றோருக்கு மருந்து கொடுத்தல் இரண் டாவதாகச் சிறந்த தர்மம். அன்னதானம் அல்லது பசியுற்றோருக்கு உணவு கொடுத்தல் மூன்றாவதாகச் சிறந்த தர்மம்.

ஆரம்பத்தில் ஆராய்ந்தெடுக்கும், பகுத்தறியும் தர்மஞ் செய்குக. பிற்பாடு தராதரமறியாத தர் மம் பயில்க. ஒவ்வோர் ஆளும் இறைவனின் தோற் றம் என்று நீ உணரும்போது எவர் நல்லவர், எவர் கூடாதவர் என்று பகுத்தறிவது கஷ்டம்.

ஏழைகளுக்கும் நோயுற்றோருக்கும் உதவியற் றோருக்கும் கைவிடப்பட்டோருக்கும் கொடுக்குக. அனாதைகளுக்கும் முதுமையுற்றோருக்கும் குருடருக் கும் உதவியற்ற கைம்பெண்களுக்கும் கொடுக்குக. சாதுக்களுக்கும் சந்நியாசிகளுக்கும் சமய, சமூக நிலையங்களுக்கும் கொடுக்குக. தர்மங் கொடுத்துச் சேவிப்பதற்கு வாய்ப்பளிக்கும் மனிதனுக்கு நன்றி செலுத்துக. செம்மை மனநோக்குடன் கொடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளைத் தர்மச் செய்கைகள்மூலம் அனுபூதியடைக. செம்மை மனநிலையுடன் தர்மஞ் செய்வோருக்குப் பாராட்டு.

## அமைதியான தர்மத்தின் மகிமை

மக்கள் சிலர் தர்மஞ்செய்து தங்கள் புகைப்படத்துடன் தங்கள் பெயர்களைப் பத்திரிகைகளிற் பிரசித்தப்படுத்துவதைப் பார்க்க ஆவலாயிருக்கிறார்கள். இது ஒரு தாமதகுணத் தர்மம். இது எவ்வகையிலும் தர்மம் அன்று. எத் தர்மம் பிரசித்தம் பண்ணுகிறதோ அது தர்மம் அன்ருகிறது. அது தற்பெருமையும் புறப்பகட்டுமே.

நீ உனது தர்மத்தையும் தர்ம இயல்பையும் பிரசித்தம்பண்ணக் கூடாது. உனது தர்ம இயல்புக்காக உன்னை மக்கள் மெச்சும்போது உனது இருதயத்தில் யாதும் பேருவகை இருக்கக்கூடாது. தர்மம் இயற்கையானதாயும் தடையின்றியதாயும் இருக்கவேண்டும். கொடுத்தல் வழக்கமானதாயிருக்கவேண்டும். கொடுத்தலில் நீ அற மகிழ்ச்சி உணர வேண்டும்.

"நான் ஒரு தர்மச் செயலைச் செய்தேன். நான் சுவர்க்கத்தில் மகிழ்ச்சி நுகர்வேன். மறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பில் நான் ஒரு செல்வந்தனுய்ப் பிறப்பேன். தர்மச் செயல் எனது பாவத்தைப் போக்கும். எனது பட்டணத்தில் அல்லது மாவட்டத்தில் என்னைப்போன்ற தர்ம சிந்தையுள்ள மனிதன் இல்லை. நான் ஒரு மிகு தயையுடைய மனிதன் என்று மக்கள் அறிவர்'' என்று நீ எண்ணுதல் கூடாது. தற்புகழ்ச்சிசெய்தல் இழிவானதும் வருந்தத்தக்கதுமே.

அமைதியாகத் தர்மஞ் செய்குக. பிரசித்தம் பண்ணுதே. தற்புகழ்ச்சி செய்யாதே. உனது வலது கை செய்வதை இடதுகை அறியக்கூடாது.

சண்டையில் எதிர்த்து நிற்பது சுலபம்; ஆனல் தற்பெருமை கொள்ளாது, மற்றையோருக்கு வெளியிடாது அமைதியாக ஒரு கொடை கொடுப்பது கஷ்டம்.

## இழிவான மனநிலைத் தர்மம்

பேராசிரியர் XYZ, M. A., Ph. D., ஒரு கம்பளிப் போர்வையை ஓர் ஏழை மனிதனுக்குத் தர்மமாகக் கொடுத்தார். ''நான் அவனுக்கு அப்போர்வையைக் கொடுத்திருக்கக்கூடாது'' என்று அவர் பிற்பாடு எண்ணினுர். அவரது இதயம் கலக்கமும் துயரமுமான நிலையிலிருந்தது. அவர் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை மனிதனிடமிருந்து அப்போர்வையைத் திரும்பப்பெற விரும்பினர். அவ்விதமான தர்மம் நீ செய்தால் நீ யாதும் நன்மை அடையமாட்டாய். நீ இருதய தூய்மை பெறமாட்டாய். உலகியல் மனமுடைய மக்கள் பலர் இவ்வகையான தர்மச் செயல்கள் மட்டும் செய்கிறார்கள். இவ்வுலகம் அவ்வாருன தர்ம இயல்புடைய மனிதரால் நிறைந்திருக்கிறது.

அனைவரும் தங்களுக்கு மிகவும் தயாளமாயுள்ளனர். பலர் முதற்றரமான பாலை அல்லது தேநீரை எடுப்பார்கள். தங்கள் நண்பர்களுக்கு இரண்டாந்தரப் பாலும் அந்நியருக்கு மூன்ருந்தரப் பாலும் கொடுப்பார்கள். அவர்கள் முதற்றரமான பழங்களைத் தின்பார்கள். அழுகியவற்றை அந்நியருக்கும் அயலாருக்கும் வேலையாட்களுக்கும் கொடுப்பார்கள். பழைய உணவுத் தயாரிப்புக்களை உபயோகிப்பதற்கு நல்ல வாய்ப்புப்பெற மூன்று நாட்கள் காத்திருந்து, பின்னர் மன வேதனையுடன் தங்கள் வேலையாட்களுக்கு அவற்றை வீசுவார்கள். அவர்கள் இந்த அழுகும் பதார்த்தங்களையும் கைவிட விரும்புவதில்லை. அப்படிப்பட்ட நெஞ்சம் புண்படும் சம்பவங்களை ஏறக்குறைய எல்லாச் செல்வந்தர் வீடுகளிலும் நீ காணலாம். எத்துணையாக அப்படிப்பட்ட மக்கள் கபடமுள்ளனர்! எத்துணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்ப, இறுக்கமான இருதயத்தை அவர்கள் பெற்றுள்ளார்கள்! அவர்களது கதி உண்மையாகப் பரிதாபமானது மாத்திரமன்று; ஆனால் மிக வருந்தத் தக்கதுமே. தாங்கள் உள்ளவாருக என்ன செய்கிருர்கள் என்பதை அவர்கள் அறிவதில்லை.

எப்போதும் சிறந்த பதார்த்தங்களை, சிறந்த உணவை, சிறந்த பழங்களை, சிறந்த பாலை, சிறந்த உடைகளை நண்பர்களுக்கும் அயலாருக்கும் அந்நியருக்கும் அதிதிகளுக்கும் வேலையாட்களுக்கும் கொடுக்குக. நீ அளவு கடந்த மகிழ்ச்சி, பலம், நல்வாய்ப்புப் பெறுவாய். இதை யப்பியசித்து நன்மைகளை நீயே உணர்க.

## லோப குணமுள்ள மக்களின் சோகந்தரும் துர்க்கதி

வீட்டுக்காரரில் பெரும்பாலோர் இந்நாட்களில் முற்ருகத் தன்னலமுடையவர். பணமே அவர்களது இரத்தம். அவர்களது முகத்தில் மகிழ்ச்சியின்மையையும் அவலட்சணத்தையும் நீ காண்பாய். எவன் தன்னில் லோபகுணமுள்ள இயல்பைப் பெற்றிருக்கிருனே, அவனைப் பேராவல், காமம், அழுக்காறு, வெறுப்பு, மந்தகுணம் முதலியவையும் மற்றும் எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாத் தீய குணங்களும் பற்றிக்கொண்டு, அவை அவனது அக இருதயத்தையே நாசஞ் செய்கின்றன.

ஒரு லோபகுணமுள்ள மனிதன் ரூ. 50,000/- வைத்திருந்தால் அவன் அப்பணத்தை அநுபவிக்க மாட்டான்; ஆனால் இன்னும் ஓர் இலட்சத்திற்கு வாஞ்சை கொள்வான். ஒரு கோடீசுவரன் பல் கோடிச் செல்வந்தனுவதற்கு வாஞ்சைகொள்வான். அப்படிப்பட்டவர்கள் ஒரு பைசாகூடத் தர்மத்திற்குக் கொடார்கள்.

அவர்கள் முதற்றர லோபிகள். அவர்கள் ஏதோ ஒரு வகையில் அல்லது வேறுவகையிற் பணம் திரட்டிப் பதுக்கி வைக்கிறுர்கள். அவர்களது பணம் மருந்துச் செலவிற் போகிறது. அவர்களது மைந்தர்கள் அவர்களது பணத்தைக் குடியிலும் சூதாட்டத்திலும் ஒழுக்க வரம்பற்ற வாழ்க்கையிலும் வீண் செலவு செய்கிறுர்கள். அவர்கள் வங்கி முறிதலினதும் வாணிகச் சூதாடுதலினதும் நிமித்தம் மன முறிவால் மரிக்கிறுர்கள். அவர்களின் முடிவான விதி, இம்மையில் கடன் தீர்க்க முடியாத நிலையும் பட்டினியும். மறுமையில், நரகத்தில் வேதனை. அவர்களது கதி பரிதாபமானதும் வருந்தத்தக்கதுமே. ஒரு நாளாவது அவர்கள் நல்லுணவு அருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. ஒரு நாளாவது அவர்கள் நல்ல உடை உடுக்கவில்லை. அவர்கள் வெறுமனே பணத்தைப் பேணுவோர்.

உத்தியோகத்தர் சிலர் சேவையிலிருந்து நீங்கி கங்கை, நர்மதா, ஜமுனு முதலியவற்றின் கரைகளிற் சீவிக்கிருர்கள். அவர்கள் சிறிது செபமும் தியானமும் செய்து யோகவாசிட்டமும் உபநிஷதங்களும் படித்துத் தாங்கள் சீவன் முக்தர்கள் என்று சங்கற்பிக்கிருர்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளில் மிகுமோகம் மனத்திற் கொள்கிருர்கள். அவர்கள் தங்கள் உபகாரச் சம்பளத்தைத் தங்கள் மைந்தருக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் அனுப்புகிருர்கள். அவர்கள் ஒரு பைசா கூடத் தர்மதிற் செலவழியார்கள். அவர்கள் லோபத்தன்மையின் உரு. அவர்கள் மோசமான தன்மயக்கமுடைய ஆன்மாக்கள்! ஆயிரம் பிறப்பிலும் ஒரு லோபி ஆன்மானுபூதியைப் பற்றிக் கனுக்காணல் முடியாது. "ஒரு செல்வந்தன் கடவுளின் இராச்சியத்திற்குள் நுழைவதிலும் பார்க்க ஓர் ஒட்டகத்திற்கு ஓர் ஊசிக் கண்ணூடாகச் செல்லல் எளிது" என்று இயேசுநாதர் இயம்புகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோபத்தன்மை ஒரு பெரும் பொல்லாங்கு. அது அத்துவிதத்தின் எதிரியும் தன்னலத்தன்மையின் நண்பனுமே.

லோப குணமுள்ள மக்கள் ஆன்மீகப் பாதைக்கு முற்றாகத் தகுதியற்றவர்கள். அவர்களது சகவாசமே ஆன்மிக நாட்டமுடையவர்களுக்கு மிகு அபாயமானது. அவர்கள் தங்கள் தூய்மையற்ற, இறுக்கமான இருதயத்தினிமித்தம் முழு வளிமண்டலத்தையும் சீர்கெடுக்கிறார்கள்.

நீ ஒரு விரிந்த இருதயத்தைப் பெற்றிருக்க வேண்டும். நீ பணத்தை ஏழைகளுக்குக் கற்கள் போல் அள்ளி வீசவேண்டும், அப்போதுமட்டுமே நீ அத்துவித உணர்ச்சியையும் சமாதியையும் விசுவப் பிரேமையையும் விருத்திபண்ணலாம்.

## எவ்வாறு தர்மஞ் செய்வது?

உன்னிடம் உள்ளவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள். சில பைசாக்களை உன் சட்டைப் பையில் எப்போதும் வைத்திருந்து ஏழைகளுக்குத் தினமும் தர்மத்தில் வழங்கு. இதை உடனடியாக அப்பியசி.

பகிர்ந்துகொள்வதில் அமைதியும் ஆனந்தமும் உண்டு. பகிர்வது விசுவப் பிரேமையை யுண்டாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோபத்தன்மையை அழிக்கிறது. பகிர்தல் சுய நலத்தை நீக்கி சுயநலமின்மையை உண்டாக்குகின்றது. பகிர்தல் இருதயத்தைத் தூய்மைப்படுத்துகிறது. பகிர்தல் ஒருமையுணர்ச்சியை விருத்தி பண்ணுகிறது.

உன்னிடமுள்ள அனைத்தையும்-பொருள், மனம், நடத்தை, ஆத்மீக சம்பந்தமான முதலியவற்றை—மற்றையவர்களுடன் பகிர்ந்துகொள். இதுவே உண்மையாகும். உன் இருதயம் விரியும். நீ வாழ்வின் ஒன்றுந்தன்மையையும் ஒருமையுணர்ச்சியையும் நுகர்வாய். இது அத்வைத அனுபூதிக்குச் செலுத்தும்.

தர்மச் செயல்கள் தினமும் செய்ய நீ விரும்ப வேண்டும். ஏதும் வாய்ப்பை நீ தவறவிடக் கூடாது. நீ நல்வாய்ப்புக்களை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். சுவேச்சையான சாத்துவிகத் தர்ம வகையிலும் சிறந்த யோகம் அல்லது யாகம் இல்லை. கர்ணனும் ராஜபோஜனும் எண்ணற்ற தர்மச் செயல்களைச் செய்தார்கள். அதனுல் அவர்கள் இன்றும் எங்கள் இருதயத்தில் வசிக்கிறுர்கள்.

தர்மம் சிரத்தையுடன் கொடுக்கப்பட வேண்டும். தர்மம் ஒருபோதும் சிரத்தையின்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்படக் கூடாது. தர்மம் தாராளமாகக் கொடுக்கப்பட வேண்டும். தர்மம் அடக்கத்துடன் கொடுக்கப்பட வேண்டும் தர்மம் அநுதாபத்துடன் கொடுக்கப்பட வேண்டும்.

நீ ஓர் அதிதிக்கு கொடுக்க இயலும் உணவு எளிய, அற்ப உணவாய் இருக்கலாம்; ஆனால் நீ அதை அன்புடன் அளித்தால் அது அதிக சக்தியையும் ஊட்ட வளத்தையும் சுவையையும் பெறுகிறது. நீ உனது அதிதிக்கு நிறைவான போசனத்தைச் சேவித்து, ''எல்லாம் சரி, இப்போது நீ வந்து விட்டமையினால், போய் உன் வயிற்றை நிரப்பு'' என்று இறுமாப்புடன் சொன்னால், அவ்வுணவு நஞ்சாக மாறுகிறது. அவன் ஓர் உறவினனாய் அல்லது சிநேகிதனாய் அல்லது இரப்போனாய் இருப்பினும், எத்தரமான உணவு நீ கொடுப்பினும், அதை அன்புடனும் தயையுடனும் அளிக்குக. உபசார சீலமே உணவின் சாரம்.

## தர்மம் இருதயத்தைத் தூய்மைப்படுத்துகிறது

பாவங்கள் தர்மத்தால் அழிக்கப்படலாம். ''தர்மம் எண்ணற்ற பாவங்களை அழிக்கின்றது'' என்கிறார் இயேசுநாதர். தர்மமே இருதயத்தை மிகப் புனிதப்படுத்துவது. ''யாகமும் தர்மமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமும் நுண்மதியைப் பரிசுத்தப்படுத்துபவை '' என்பதை நீ கீதையிற் காண்பாய்.

ஒருவர் லோபத்தன்மையை நீக்கிக்கொள்ளக் கூடுமாயின் சாதனையின் பெரும் பகுதி முடிந்ததே. அவர் யதார்த்தமாய் ஏதோ ஒன்றைப் பெற்று விட்டார்.

இவ்வுதார விருத்தியை விருத்திபண்ணுக. அப்போது ராஜாதி ராஜனுகலாம். நீ கொடுத்தால் உலகின் முழுச்செல்வமும் உன்னுடையதே. பணம் உனக்கு வந்து சேரும். இதுவே இயற்கையின் மாருவியல்புடைய, வசப்படாத, இரக்கமில்லாத விதி. ஆகையால் கொடு. கொடு. நீ பெறுவதினுல் சீவனம் செய்கிருய். நீ கொடுப்பதினுல் சீவியத்தை உண்டாக்குகிருய். எப்போதும் கொடு, கொடு, கொடு. இதுவே வளத்தினதும் தெய்வீக வாழ்வினதும் இரகசியம்.

பலர் சக்தி, மக்கட் செல்வாக்கு, அமைதி, மகிழ்ச்சி முதலியவற்றைத் தாராள குணமுள்ள இருதயமுல மாத்திரம் அடைந்துள்ளார்கள். லோப குணமுள்ளவர்கள் இவையனைத்தையும் பெற ஒருபோதும் கனுக்காணவும் முடியாது. வாழ்வில் சித்திபெறவும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செல்வத்தையும் பணத்தையும் விரும்பினுல் மிகுதியான தர்மம் செய்குக. நீ கூரறிவுள்ளவனுக விரும்பினுல் வயோதிபரையும் மகாத்மாக்களையும் சேவிக்குக. நீ பாவங்களை நீக்க விரும்பினுல் யாகஞ் செய்குக.

கடவுளை எங்கும் காண்க. அனைவருடனும் பகிர்ந்து கொள்க. பெரும் பகுதி மற்றையவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். பதியச் செய்த லோபத்தன்மையை அழிக்குக. உனது இருதயம் விரியும். நீ வாழ்வில் ஒரு பரந்த நோக்கைப் பெறுவாய். நீ ஒரு புதிய விசாலமான மனப் பார்வையைப் பெற்றிருப்பாய். இருதயத்துள் வசிப்போனிலிருந்து நீ பெறும் உதவியை உணரலாம். தெய்வீகப் பரவசத்தினதும் ஆன்மிக இன்பத்தினதும் விவரிக்க முடியாத சிலிர்ப்பு அல்லது உணர்ச்சி மிகுதியை நுகரலாம். இது உனக்கு அபூர்வ அகப்பலத்தைத் தரும்.

ஓ மனிதனே ! மிகுதியாகத் தர்மத்திற் கொடு. நீ அமைதி, வளம், அபிவிருத்தி முதலியவற்றை இம்மையில் நுகர்வாய், மறுமையில் சுவர்க்கத்திற்குப் போவாய். நீ இருதயத் தூய்மையும் மோட்சமும் அடைவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர் பார்க்காமற் போனாலும், ஈசுவரன் பார்க்கிறான் என்று நம்பி, தனியாக விருக்கும் போது எவனொருவன் ஒரு பாவத்தையும் செய்வதில்லையோ அவன்தான் வாஸ்தவமான தர்மவானவான். மனிதர் கண்ணுக்குப் புலப்படாமலிருந்தாலும் ஈசுவர திருஷ்டிக்குப்படுவோம் என்ற பயத்தினால் எவனொருவன் காட்டில் தனியாக இருக்கும்போதும் ஒரு கட்டழகியின் வலைக்குட்படாமலும், காம எண்ணத்தால் அவளைக் கண்ணெடுத்துப் பாராமலும் இருக்கிறானோ அவன்தான் வாஸ்தவமான யோகி. ஒருவருமில்லாது தனித்துள்ள ஒரு வீட்டில் காணப்படும் ஒரு பொன்முடிப்பை எவனொருவன் எடுத்துக்கொண்டு போக இச்சைப்படமாட்டானோ அவனே தர்மவான். ஊரார் வசைமொழிக்குப் பயந்து வெளிவேஷத்துக்காக எவனொருவன் தர்மத்தை அனுஷ்டிக்கிறானோ அவனைத் தர்மவான் என்று சொல்லக்கூடாது. மௌனமாயும் மறைவாயும் அனுஷ்டிக்கும் தர்மமே வாஸ்தவமான தர்மம்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானயக்ஞத்தின் மகிமை

## பகவத்கீதையிற்

## கிருஷ்ண பிரபு அருள்கிருர் :

'எவன் என்னிடத்துப் பரமபக்தியுடன் இப்பரம இரகசியத்தை (கீதாசாஸ்திர போதனைகளை) என் பக்தர்களுக்குப் போதிக்கிருனே — அவன் ஐயமின்றி என்னை அடைவான். மக்களுள் அவனைவிட எனக்கு விருப்பமான செயல் புரிபவனும் யாருமில்லை ; உலகில் எனக்கினியானும் அவனைவிட யாருமில்லை. எவன் இக் கீதா சாஸ்திரத்தை என் பக்தர்களுக்கு வழங்குகிருனே அவன் எனக்கு மிகப் பெரும் சேவை செய்கிருன். அவன் எனக்கு மிக இனியான். இத்தலைமுறையில் எனக்கு விருப்பமான சேவை புரிபவன் வேறு யாருமில்லை. எதிர்காலத்திலும் யாரும் இருக்கப்போவதில்லை.'

(கீதை அதி. XVIII / 68-69.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக் கொடைகளிலும் ஞானக் கொடையே மிகச் சிறந்தது. அறிவுக்கொடை உணவு, உடை, உறையிடம், மருந்து, செல்வம் முதலியன கொடுப்பதிலும் மேன்மையான கொடை; ஏனெனில் அது நித்திய அமைதியை அளிக்கிறது.

*　　　*　　　*

ஞானக்கொடையே மிகச் சிறந்த கொடை; ஏனெனில் அது சாவாமையும் நித்தியானந்தமும் அளிக்கிறது.

*　　　*　　　*

நான் கொடுப்பதில் மகிழ்வுறுகிறேன். நான் எப்பொழுதும் கொடுக்கிறேன். நான் இயற்கையானதும் தடையின்றியதுமான வள்ளன்மை பெற்றிருக்கிறேன். நான் அனைத்தையும் செலவழிக்கிறேன். நான் மிகுதியவான தர்மம் செய்கிறேன்.

*　　　*　　　*

தர்மச் செயல்கள் என்றும் உன்னுடன் இருக்கும். உன்னைக் காப்பாற்றும். உன் வருமானத்தில் பத்தில் ஒருபங்கை நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் ஆத்மீக ஞானத்தைப் பரப்புவதற்குக் கொடு. சற்றும் பின் நில்லாமல் உற்சாகத்துடன் விரைவிற் கொடு. தர்மம் பாவ பலனைத் தவிர்க்கும். மனத்தூய்மையளிக்கும். செய்கையில் அன்பே தர்மம்.

— **சிவானந்தர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் நூல்கள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| முக்கிய உபநிஷதங்களின் சாரம் | | |
| அத்தியாயம் 1—3 ஈச, கேன, | கட-உபநிஷதங்கள் | 1·00 |
| ,, | 4 பிரச்னோபநிஷதம் | ·25 |
| ,, | 5 முண்டகோபநிஷதம் | ·25 |
| ,, | 6—8 மாண்டூக்கிய, தைத்ரீய, ஐதரேய உபநிஷதங்கள் | ·50 |
| ,, | 9—10 சாந்தோக்கிய. பிருஹதாரணிய உபநிஷதங்கள் | ·50 |
| அத்தியாயம் 1—10 (Half Calico) | | 3·50 |
| சுவேதாசுவதர உபநிஷத விளக்கம் (அச்சில்) | | |
| சிவானந்தரின் அருளுரைகள் | | ·60 |
| இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | | ·75 |
| திவ்வியானந்தம் 1—8 அகிம்சை, கோபம், அவதாரம், பக்தி, பிரம்மம், பிரமசரியம், பௌத்த மதம், தர்மம் | (தனித்தனி) | ·20 |

கிடைக்குமிடம்:

**தெய்வீக வாழ்க்கைச் சங்கம்,** *(யாழ்ப்பாணக் கிளை)*
நல்லூர், யாழ்ப்பாணம், சிலோன்,

**ஆத்மஜோதி நிலையம்,**
நாவலப்பிட்டி,
சிலோன்.

**ஸ்ரீ பொ. கந்தையா,**
"தனசக்தி",
திருக்கோணமலை, சிலோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org